1967 ஜூலை 6]

திரு. நா. காசிராமன் : இந்தத் திட்டத்திற்காக ஆகக் கூடிய மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதைப்பற்றி விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குடியாத்தத்திலுள்ள மருத்துவ மனையைப்பற்றி அடுத்த துணைக் கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் கேட்பார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : குடியாத்தம் மருத்துவ மனையில் எத்தனை படுக்கைகள் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதைப்பற்றிய விவரம் இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : பெர்மனெண்டு பில்டிங் உடனடியாகக் கட்டவில்லை என்று சொன்னாலும், டெம்பரரி ஷெட்டாவது கட்டி, அதிகமான படுக்கைகளை ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதைப்பற்றியும் விவரம் இப்பொழுது இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரம் கிடைக்கும்.

திரு. கே. விநயகம் : குடியாத்தம் ஒரு தாலுகா தலைநகரமாக இருப்பினும் கூட, அங்கே ஒரு அரசாங்க ஆஸ்பத்திரி இல்லை என்பது உண்மைதானா?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The main question relates to additional accommodation. There is already a hospital.

* 188 **வினா.—திரு. வெ. முனுசாமி** : மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செஞ்சியிலுள்ள அரசினர் வைத்திய சாலையில் அறுவை சிகிச்சைக் கூடம் (Operation Theatre) அமைக்க எடுத்த ஏற்பாடு என்னவாயிற்று?

(இ) காலதாமதத்திற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) அரசின் நிதிநிலை மிகக் கடினமாக இருப்பதால் செஞ்சி அரசினர் மருத்துவ மனையில் மகப்பேறு-அறுவை சிகிச்சைக் கூடம் கட்டும் செயற்குறிப்பு தள்ளிப் போடப்பட்டுள்ளது.